தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

1994 மே 4, புதன்கிழமை

சித்திரை 21, பவ, திருவள்ளுவர் ஆண்டு—2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு''

வீரத்தன்மையும், குடிமக்களை நன்கு பாதுகாத்தலும், நீதி நூல்களைக் கற்றலும், செய்யத்தக்கதை அறிதலும், விடா முயற்சியும் ஆகிய ஐந்து பண்புகளுடனே மாட்சிமைப்பட்டு விளங்குபவர்களே நல்ல அமைச்சர்கள்.

1. வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள், வினா எண் 501, திரு எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உணவு அமைச்சர்.

501—

கீழப்பாவூர் ஒன்றியம், சிவகாமிபுரம் பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்.

* 20737— திரு. எஸ்.எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவகாமிபுரம் கிராமத்திலுள்ள பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர நியாயவிலைக் கடையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா ?

[1994 மே 4

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் சிவகாமிபுரம் கிராமத்தில் உள்ள பகுதி நேரக் கடையில் 328 குடும்ப அட்டைகளே உள்ளதால் இக்கடையே இந்த 328 குடும்ப அட்டைதாரர்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்து வருகிறது. ஆகவே, முழுநேர நியாயவிலைக் கடையாக மாற்றியமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 328 கார்டுகள்தான் அங்கே இருக்கின்றன என்று சொன்னார்கள் அந்த சிவகாமிபுரம் கிராமத்தில் 1,500 மக்கள் வசிக்கின்றார்கள். இப்போது புதிதாகக் கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதலால் இப்போது 500 கார்டுகளுக்கு மேலாக இருக்கும் என்று அந்த ஊர்க்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே எவ்வளவு கார்டுகள் இருந்தால் அங்கே இருக்கின்ற பகுதி நேரக் கடை முழு நேரக் கடையாக இருக்கும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்த பகுதி நேரக் கடைகளில் பொருட்கள் எல்லாம் முழுமையாக அந்தப் பகுதி மக்களுக்கு, கார்டுகள் இருக்கின்ற மக்களுக்கு, கிடைக்காமல் இருக்கிறது. இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் புதிதாக கொடுக்கப்பட்ட கார்டுகளையும் இணைத்து ஒரு முழு நேர கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே உறுதி அளிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிவகாமிபுரம் பகுதி நேர நியாய விலைக் கடை நாகல்குளம் மெயின் அமுதம் நியாய விலைக் கடையுடன் இணைந்திருக்கிறது. ஆகவே அந்த மெயின் கடையிலே எவ்வளவு அட்டைகள் இருக்கின்றன என்ற விவரம் இங்கே இல்லை. ஆனால் சிவகாமிபுரத்தில் 328 அட்டைகள்தான் என்ற தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல புதிய அட்டைகள் அங்கே எத்தனை வழங்கப்பட்டிருக்கின்றன அவையும் சேர்த்து கணக்குத் தரப்பட்டிருக்கிறதா இல்லையா என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் தனியாக ஒரு கடை நடத்தவேண்டுமானால், குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குறைவாக அட்டைகள் இருந்தால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அது அரசுக்கு இழப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக மிகப் பெரிய அளவிலே 20,000 கடைகளுக்கு மேல் நடத்துகின்ற கூட்டுறவுத் துறைக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆனால் இந்தக் கடையைப் பொறுத்தவரையில் அது நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கடையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கடையினால் என்ன லாபம் வருகிறது அல்லது என்ன நஷ்டம் வரும் என்பதில் நான் ஒரு குறிப்பைத் தர விரும்புகிறேன். அங்கே வழங்கப்படுகிற பொருள்கள் மூலம் அந்தக் கடைக்கு வருகிற லாபம் ரூ. 628.36 பைசா. அதாவது 628 ரூபாய் 36 காசுகள்தான். அங்கே தனியாக ஒரு கடையை நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தினால் சுமார் 4,700 ரூபாய் மாதந் தோறும் செலவாகும். ஆகவேதான் தனியாக கடைகள் தொடங்குவதற்கு இயலாது என்ற சூழ்நிலை இருக்கிறது. இங்கே நான் பலமுறை பதிலளித்து இருக்கிறேன். இப் போதும் தெரிவிக்கிறேன், இப்படி கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு இருக்கின்ற இந்த சங்கடங்களைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுத்து அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதை ஒட்டி இந்தக் கருத்துக் கள் பரிசீலனையில் இருக்கின்றன. ஆகவே, இந்தப் பொருட் கள் எல்லாம் சரியாக கிடைக்கவில்லை என்று சொல்வது உண்மையாக இருக்குமானால் அதை அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும். முழுமையாக கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யும். மேலும் அங்கே தனியாக கடைகள் துவங்குவதற்கு, அங்கே இருக்கும் பாதை; லாரிகள் போகமுடியாத பாதையாக இருக் கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. எப்படி இருந்தாலும், அந்த சங்கடங்களை எல்லாம் போக்கி குக்கிராம மக்களுக்கு அங்கேயே அந்த உணவுப் பொருள் கிடைப்பதற்கான முயற்சியை எடுக்கின்ற அந்தத் தீவிர பரிசீலனையை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 800 கார்டுகள் வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இதற்கு முன்னால் 500 கார்டுகள் போதுமானது கடை திறப்பதற்கு என்று அரசு தரப்பிலே சொல்லப்பட்டி ருக்கிறது. மேலும் அமைச்சர் அவர்கள் நெல்லைக்கு வரும் போது அங்கேயுள்ள பொது மக்கள் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்

TRUTH ALONE TRIUMPHS

குள்ளாக எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடை, அதாவது பகுதி நேரக் கடைகளாவது திறக்கவேண்டு மென்ற கோரிக்கையை வைத்தார்கள். அது சம்பந்தமாகப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த மாதிரி நடவடிக்கைகள் ஏதாவது இருக்கிறதா? அரசு அந்த பொது மக்களுடைய நன்மைக்காக ஒவ்வொரு கிராமத்திலும் கடை களைத் திறக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் பதிலிலே குறிப்பிட்டேன். நெல்லைக்கு வருகிறபோது மாத்திரமல்ல, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே தங்களுடைய பகுதிகளிலே இப்படிப்பட்ட பகுதி நேரக் கடைகள் அல்லது முழு நேரக் கடைகள் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் அந்த நிலைமை இருக்கிறது. இன்றைக்கு நாம் 22 ஆயிரம் கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே 16 ஆயிரத்துச் சொச்சம் கடைகள் ரெவின்யூ வில்லேஜிலே நடக்கிறது. ஒரு ரெவின்யூ வில்லேஜ் என்றால், 4,5,6,7,8 ஹெம்லெட் வில்லேஜ்ஜஸ் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு இருக்கிற நம்முடைய நிர்ணயப்படி 3 கிலோ மீட்டர் அல்லது அதற்கு அதிகமாக இருந்தால் பகுதி நேரக் கடைகள் இருக்கலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்த 3 ஆண்டு களுக்குள்ளேயே சுமார் 1,500 கடைகள் வரை அந்தப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதிலே யிருந்து எல்லா இடங்களிலேயும் மக்கள் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தீவிரமாகப் பரிசீலியுங்கள், அதனாலே அரசாங்கத்துக்கு என்ன செலவு ஆகும்? அப்படி கடைகள் திறக்க வேண்டுமானால், எத்தனை கிராமங்களிலே திறக்கவேண்டியிருக்கும்? அப்படித் திறந்தால் அங்கே கூட்டுறவுத் துறையோ அல்லது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமோ திறந்தால் அதற்கு என்ன பொறுப்பு வரும்? எவ்வளவு செலவாகும்? இவைகளை எல்லாம் ஆராய்ந்து விரைவிலேயே அவர்கள் அறிக்கைத் தரச் சொல்லியிருக்கிறார்கள். அதையேதான் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு அரசு பரிசீலித்து வருகிறது. அப்படி கடைகள் திறக்கவேண்டு மானால் இன்னும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் கடை களுக்கு மேல் திறக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. அப்படித் திறந்தால் அதிலே எவ்வளவு பொருளாதார இழப்பு நமக்கு வரும். மேலும் இந்த உணவுத்

1994 மே 4]

துறைக்காக சுமார் ரூ. 400 கோடிக்கு மேல் எவ்வளவு செலவு செய்ய வேண்டிய நெருக்கடி வரும் என்பதைப் பற்றி எல்லாம் அரசு தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் தாண்டி கிராமப்பகுதியிலே குறிப்பாக பெண்கள் இந்த உணவுப் பொருள்களை வாங்கு வதற்கு வசதியாக ஒரு கிலோ மீட்டருக்குள்ளே என்று நாம் ஒப்புக் கொள்ள முடியாது. அதை நிர்ணயிக்கவும் முடியாது. மிகக் குறைந்த அளவிலே ஒரு 3,4 கிராமங்களுக்குள்ளே மக்கள், குறிப்பாக பெண்கள், சென்று வாங்குகின்ற வசதியை ஏற்படுத்துவதற்காக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 502, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

502—

சிதம்பரம் தொகுதி தெற்கு விடுதான்களில் கிராம சுகாதார நிலையம் அமைத்தல்.

*17470— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதியில் தெற்கு விடுதான்கள் கிராமத்தில் கிராம சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெற்குவிடுதான்கள் கிராமம் என் பிறந்த ஊராகும். அது பினதங்கிய கிராமம். அத்தகைய பின் தங்கிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் என்னை புவனகிரி தொகுதி மக்களின் நலனுக்காக உழைக்க வாய்ப்பு அளித்த என் அன்பு அன்னை இதய தெய்வம்